11th March 1966]

கனம் திரு. பூ. கக்கன் : அந்த மாடுகள் நல்ல பால் கொடுக்கிற மாடுகள்தான். வமிச அபிவிருத்தி அதிகமாக ஏற்படுகிறது.

அரசாங்க மருத்துவ மனைகள்

* 248 **கேள்வி.—திரு. பி. முருகையன்** : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஆலங்குடியிலுள்ள அரசாங்க மருத்துவ மனைக்கு வேருெரு கட்டடம் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது உண்மையா ?

(இ) ஆமெனில், இன்னும் வேலை ஆரம்பிக்கப்படாமைக்குக் காரணமென்ன ?

(உ) மேற்படி வேலை எப்போது தொடங்கப்படும் ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) முதல் (உ) வரை ; ஆலங்குடியிலுள்ள அரசாங்க மருத்துவ மனைக்குப் புதிய கட்டடங்கள் கட்டுவதற்கு தேவையான நிலங்கள் ஆர்ஜிதம் செய்யப்பட்டு வருகின்றன. இந்த கட்டடத் திட்டம் 1967-68-ம் ஆண்டில் II -ம் பாகத் திட்டமாக ஆலோசனை செய்யப்படும்.

* 249 **கேள்வி.—திரு. சி. சிவசுப்பிரமணியன்** : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சிதம்பரம் டவுன் அரசாங்க பெரிய ஹாஸ்பிட்டலை வேறு இடத்திற்கு மாற்றும் திட்டம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையிலிருக்கின்றதா ?

(இ) ஆமெனில், அது எந்த நிலையிலுள்ளது ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) & (இ) சிதம்பரம் அரசாங்க மருத்துவ மனைக்குப் புதிய இடத்தில் புதுக் கட்டடம் கட்டுவது 1966-67-ம் ஆண்டில் II-ம் பாகத் திட்டமாக ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

பஞ்சாயத்துக்களை நகரசபைகளாக மாற்றுதல்

* 250 **கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி** : கனம் தலநிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தென்னுர்க்காடு மாவட்டத்திலுள்ள பன்னுருட்டி, நெல்லிக்குப்பம் ஆகிய டவுன் பஞ்சாயத்துக்களை நகரசபைகளாக மாற்றும் திட்டம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையிலிருக்கிறதா ?

(இ) ஆமெனில், அதன் விவரமென்ன ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : (அ) & (இ) ஆம். நெல்லிக்குப்பம், பன்னுருட்டி பஞ்சாயத்துக்களை நகரசபைகளாக மாற்றும் திட்டம் அரசாங்கத்தின் பரிசிலனையில் இருக்கிறது.